**கவனிக்க.-** *2008.01.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1587 - 2009 ජනවාරි 30 වැනි සිකුරාදා - 2009.01.30**

*1587 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 162 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 162 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 162 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2008, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 62

டீஆர்எவ்/21/ஆர்ஈசீர் /2725.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2008, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாபதிபதி அவர்களால் அங்கீகரிகக்ப்பட்டுள்ளது:-

இரண்டாம் லெப்டினன்ட் அமரசிங்க ஆரச்சிகே உதய திலீப குமார, கரெ (உ/66145)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008, செத்தெம்பர் 05.

1-756

# அரசாங்க அறிவித்தல்கள்

## சங்கங்கள் கட்டளைச் சட்டம்

சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 123) 3 மற்றும் 4 ஆம் பிரிவினால், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சர் சுமித்திர ஆரச்சிகே டொன் பந்துல சந்திரசிறி குணவர்தன ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம்

1. கட்டளைச் சட்டததின் தத்துவங்கள் மற்றும் வசதிகள் வரையறுக்கின்ற நோக்கங்களுக்கிணங்க இல. 01, பெதஸ்தா பிளேஸ், கொழும்பு 05 இல் அமைந்துள்ள "த இன்ஸ்டிடியுட் ஒப் சேடிபைட் புரபெசனல் மெனேஜர்ஸ்" என்ற பெயரைக் கொண்ட சங்கத்தின் நோக்கங்களுக்கு அதிகாரமளிக்கின்றேன்.

2. மேற்கூறப்பட்ட சங்கத்திற்கான கட்டளைச் சட்டத்தின் பிரயோகம், கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(4) இன் ஏற்பாடு மூலம் வரையறுக்கப் படுகின்றது.

சுமித்திர ஆரச்சிகே டொன் பந்துல சந்திரசிரி குணவர்தன,
வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு
மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சர்.

வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும்
நுகர்வோர் சேவைகள் அமைச்சு,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.
2009, சனவரி 02.

1-723

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2008, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 12, சாஞ்சி ஆராச்சி கார்டின்ஸ், தே. வீ. தி., ஜீ 3/6 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தொம்பேகொட்டுவ ஹங்கிலிகெதர திலிப் குமார குலரத்ன (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். சூரியாராச்சி அத்தாட்சிப்படுத்திய 2006, யூலை 13 ஆந் திகதி கொண்ட 820 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும்

ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட தொம்பேகொட்டுவ ஹங்கிலிகெதர திலிப் குமார குலரத்ன மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும்,

ஏழு இலட்சத்து இருபத்தையாயிரத்து ஐநூற்றுப் பதினொரு ரூபா முப்பத்தொரு சதத்தையும் (ரூ. 7,25,511.31) தவணைக் கடன்வசதி மீது 2008.09.14 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள ஆறு இலட்சத்து நாற்பத்துமூவாயிரம் ரூபா மீது (ரூ. 6,43,000) 2008.09.15 முதல் விற்பனைத் திகதி வரை உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திரிவங்க அன்ட் சேனநாயக்க ஒக்ஷனியர்ஸைச் சேர்ந்த தரு. திரிவங்க சீ. சேநநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவர மெத பலாத்த கடலதெனியவில் அமைந்துள்ள ''உடஹேனவத்த? தங்கொட்டுவ மற்றும் தொம்பேகொட்டுவேகெதரவத்த'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எல். கே. ஜயசுந்தர தயாரித்த 2006, சனவரி 31 ஆந் திகதி கொண்ட J2363 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஸ்ரீ விக்ரம மற்றும் கீர்த்திரத்ன ஆகியோரின் மரபுரிமையாளர்கள் உரிமைகோரும் இதே காணியின் எஞ்சிய பாகம் ; கிழக்கில் : துண்டு 5; தெற்கில் : துண்டு 4 (வீதி) ; மேற்கில் : துண்டு 2 மற்றும் டீ. எஸ். ஆர்லிஸ்ஹாமி உரிமைகோரும் இதே காணியின் எஞ்சிய பாகம் என்பன அமைந்துள்ளன. மேற்படி J2363 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் இருபத்து மூன்று தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 23.67.பே.). இது கண்டி காணிப் பதிவகத்தில் C 391/122 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

1-744/1

---

### வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2008, நவெம்பர் 26 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''தெஹிவளை ஹில் வீதிக்கு அப்பால் கனல் பேங்க் வீதி, 134 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மொஹமட் நிலாம் மொஹமட் அபுசலாம் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம். பி. பி. என். மஹிபால அத்தாட்சிப்படுத்திய 2005, திசெம்பர் 26 ஆந் திகதி கொண்ட 45 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட மொஹமட் நிலாம் மொஹமட் அபுசலாம் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்கவதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுநூற்று முப்பத்து நான்கு ரூபா தொண்ணூற்றி ஏழு சதத்தையும் (ரூ. 53,26,634.97) மேலதிகப்பற்றின் மீது 2008.10.08 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிலிருக்கும் முதல் ஐம்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எழுபத்து நான்கு ரூபா தொண்ணூற்றி ஏழு சதம் (ரூ. 52,99,974.97) உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறு 2008.10.09 முதல் விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் கொழும்பு ட்ரையட் ஆக்ஷனியர்ஸ் திரு. என். டீ. டீ. பி. சேனநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட வெள்ளவத்தை தெற்கு 47 ஆம் இலக்க வட்டாரம் வெள்ளவத்தையில் அமைந்துள்ளதும் விவேகானந்த வீதி, 30 6/6 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. சந்திரசேன தயாரித்த 2001.06.20 ஆந் திகதி கொண்ட 2001/153 ஆம் இலக்க கூட்டாட்சியாதன வரைபடத்தில் 5944A/F6/U6 என அடையாளமிடப்பட்ட இருப்பிடக்கூறு முழுவதும் (ஆறாம் மாடியில்).

5944A/F6/U6 என அடையாளமிடப்பட்ட இருப்பிடக்கூறுக்கு (ஆறாம் மாடியில்) எல்லைகளாக - வடக்கில் : இக்கூறை CE1 என்ற பொது வசதிக்கு மேலேயுள்ள திறந்த இடைவெளியிலிருந்து பிரிக்கும் சுவர் ; கிழக்கில் : இக்கூறை CE1 என்ற பொது வசதிக்கு மேலேயுள்ள திறந்த வெளியிலிருந்து பிரிக்கும் சுவர் மற்றும் இக்கூறையும் கூறு 5944A/F6/U7 என்னும் கூறையும் பிரிக்கும் சுவரின் மத்தி; தெற்கில் : இக்கூறை CE 13 என்னும் கூறிலிருந்து பிரிக்கும் சுவர் ; மேற்கில் : இக்கூறை 5944A/F6/U5 என்னும் கூறிலிருந்து பிரிக்கும் சுவரின் மத்தி. முகட்டில் இக்கூறை கூரை டெரஸிலிருந்து பிரிக்கும் கொங்கிறீட் பாளத்தின் மத்தி. அடித் தளத்தில் இக்கூறை 5944A/F5/U4 என்னும் கூறைப் பிரிக்கும் கொங்கிறீட் பாளத்தின் மத்திய என்பன அமைந்துள்ளன. மேற்படி 2001/153 ஆம் இலக்க கூட்டாட்சி ஆதன வரைபடத்தின்படி இதன் தளப் பரப்பளவு அறுபத்து நாலு தசம் எட்டு மூன்று சதுர மீட்டர் (64.83 சதுர மீட்டர்) அல்லது அறுநூற்றி தொண்ணூற்றியேழு தசம் ஐந்து ஒன்பது சதுர அடி (697.59 சதுர அடி).

கூறு 5944A/F6/U6 1 படுக்கை அறையையும் (மேலும் சரியாக 2 படுக்கை அறைகள்) 1 சமையலறையையும் 1 உணவுப் பண்டகத்தையும் 3 மலசல கூடங்களையும் 2 டெரஸ்களையும் கொண்டுள்ளது.

இந்தக் கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகளில் 5944A/F6/U6 என்னும் கூறின் பங்குப் பெறுமதியின் 2.125%.

இக்கூறுக்கு நேரடி அணுக்கம் CE 13 ஆகும்.

இக்கூறு வெள்ளவத்தை 2 ஆம் இலக்கப் பதிவு வரைபடத்திலுள்ள துண்டு 5944 என்பதிலுள்ள உட்பிரிவுசெய்யப்பட்ட கட்டிடம் A என்பதன் கூறொன்றாகும்.

மேற்படி 5944A/F6/U6 என்னும் கூறு கொழும்பு காணிப் பதிவகத்தில் Con. SP 13/156 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 45 ஆம் இலக்க உறுதிக்கான இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்படும் பொது வசதிகளுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

இல. 242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

1-744/2

---

### மக்கள் வங்கி – ஊரகஸ்மங்ஹந்திய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.10.24 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2006.06.30 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 744 என்ற ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் ஹேவகே அஸங்க யனப்பிரிய சமரசிங்ஹ என்பவர் தவணை தவறியுள்ளார். அதனால் இப்பொழுது மேற்படி முறியின் மீது இருபத்தொரு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 21,64,540.25) மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.04.05 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 16.5 வீதப்படி இருபத்தொரு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 21,64,540.25) மீது ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து இருபத்தொரு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 21,64,540.25) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 744 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப் படுகின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபடபத்துவ கரந்தெனிய தெற்கு மாகல கிராமத்தில் அமைந்துள்ள பறகஹவத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. வீரவர்தன என்பவரால் 2006.04.06 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 2306 என்ற வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கம் 18125 என்ற துண்டுக்கு எல்லைகள் - வடக்கிற்கு : T. P. 222176 உம் ; கிழக்கிற்கு : வீதியும் (14 அடி அகலம் உடையது) ; தெற்கிற்கு : T. P. 222293 என்ற துண்டும் ; மேற்கிற்கு : T. P. 3873 இல் M 404 மற்றும் N 404 என்ற துண்டுகளும் இதன் எல்லைகளாகும்.

இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் 2 றூ, பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 18பே.) விசாலம் கொண்ட இக்காணியினுள் அமைந்திருக்கும் மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும். இக்காணி பலப்பிட்டிய காணிப் பதிவகத்தில் இலக்கம் A249/170 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல.22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

1-786

**மக்கள் வங்கி – திக்வெல்ல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.09.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*"மரக்கால மானகே மில்ற்ரன், ஜயவீர லியன பட்டபெந்திகே தர்ஷனி மற்றும் மரக்கால மானகே சன்னி என்போர் மக்கள் வங்கியின் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரி என். ரூபசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.12.03 ஆந் திகதி கொண்ட 1999 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீதும், மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரி. என். ரூபசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.07.09 ஆந்திகதி கொண்ட 4266 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலால், சொல்லப்பட்ட 1999 மற்றும் 4266 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது நாலு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எந்நூற்று இருபத்தொரு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,82,821.47) மற்றும் ஒன்பது இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூ. 9,88,166.70) கொண்ட தொகை இப்பொழுது சொல்லப்பட்ட மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.*

*சொல்லப்பட்ட நாலு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எந்நூற்று இருபத்தொரு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,82,821.47) கொண்ட தொகையையும் அத்துடன் நாலு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எந்நூற்று இருபத்தொரு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,82,821.47) கொண்ட தொகை மீது 2008.05.03 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் இரண்டு ஐந்து சதவீத (18.25%) ப்படியான வட்டியையும் மற்றும் ஒன்பது இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்றறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூ. 9,88,166.70) கொண்ட தொகையையும் அத்துடன் ஒன்பது இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்றறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூ. 9,88,166.70) கொண்ட தொகை மீது 2008.02.07 ஆந்திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்து நாலு சதவீத (24%) ப்படியான வட்டியையும் ஏலவிற்பனைச் செலவுகளையும் சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L" என்னும் பிரிவின் கீழ் மீளப்பெறப்படக்கூடிய பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவு எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1999 மற்றும் 4266 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் மாத்தறையைச் சேர்ந்த் உத்தரவு பெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."*

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

*1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வொல்லபோதபற்றுவில் தொடம்பஹல என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் ஜின்னலிகொட அறா தங்கஹவத்தை என அழைக்கப்படுவதுமான காணியினது அடுத்தடுத்து வரும் காணித்துண்டுகள் B மற்றும் C இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு 3 முழுவதும். அத்துடன் அச்சொல்லப்படட காணித்துண்டு 3 இன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 2 ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டு E (தற்போது தொடம்பஹல மஹாவித்தியாலய வளவுகள்) ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 6 ; மேற்கு : அதே காணியின் காணித்துண்டு 11 (வீதி). அத்துடன் மாத்தறை மாவட்ட காணிப் பதிவகத்தில் B 529/260 இல் பதிவு செய்யப்பட்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. கருணாதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995.03.25 ஆந் திகதி கொண்ட 967 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், பதினொன்று தசம் ஒன்று ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.19பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.*

*2. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வொல்லபோதபற்றுவில் தொடம்பஹல என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் ஜின்னலிகொட அறா தங்கஹவத்தை என அழைக்கப்படுவதுமான காணியினது அடுத்தடுத்து வரும் காணித்துண்டுகள் B மற்றும் C இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு 6 முழுவதும். அத்துடன் அச்சொல்லப்படட காணித்துண்டு 6 இன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 3 ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டு E (தற்போது தொடம்பஹல மஹாவித்தியாலய வளவுகள்) ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 7 ; மேற்கு : காணித்துண்டு 11 (வீதி). அத்துடன் மாத்தறை மாவட்ட காணிப் பதிவகத்தில் B 529/261 இல் பதிவு செய்யப்பட்டதும் உரிமம் நிலஅளவையாளர் பி. ஜி. கருணாதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995.03.25 ஆந் திகதி கொண்ட 967 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், பதினொன்று தசம் மூன்று ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.37பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.*

*3. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வொல்லபோதபற்றுவில் தொடம்பஹல என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் ஜின்னலிகொட அறா தங்கஹவத்தை என அழைக்கப்படுவதுமான காணியினது அடுத்தடுத்து வரும் காணித்துண்டுகள் B மற்றும் C இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட அடுத்தடுத்து வரும் காணித்துண்டுகள் 1 மற்றும் 4 முழுவதும். அத்துடன் அச்சொல்லப் பட்ட காணித்துண்டு 1 மற்றும் 4 இன் எல்லைகள் - வடக்கு: கறகஹவத்தை ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டு2 மற்றும் 12 அடி அகல பொது வீதியாகவிருக்கும் காணித்துண்டு 11 ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 5 ; மேற்கு : மூலக் காணியான காணித்துண்டு A. அத்துடன் மாத்தறை மாவட்ட காணிப் பதிவகத்தில் B 598/136 இல் பதிவு செய்யப்பட்டதும் உரிமம் நிலஅளவையாளர் பி. ஜி. கருணாதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995.03.25 ஆந் திகதி கொண்ட 967 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், இருபத்திரண்டு தசம் நாலு நாலு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22.44பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.*

*4. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வொல்லபோதபற்றுவில் தொடம்பஹல என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் ஜின்னலிகொட அறா தங்கஹவத்தை என அழைக்கப்படுவதுமான காணியினது அடுத்தடுத்து வரும் காணித்துண்டுகள் B மற்றும் C இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு 5 முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 5 இன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 4 ; கிழக்கு : அதே காணியின் 12 அடி அகல அணுகு வீதியாகவிருக்கும்*

காணித்துண்டு 11 ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 8 ; மேற்கு : அதே காணியின் காணித்துண்டு A. அத்துடன் மாத்தறை மாவட்ட காணிப் பதிவகத்தில் B 560/163 இல் பதிவு செய்யப்பட்டதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. கருணாதாச என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995..03.25 ஆந் திகதி கொண்ட 967 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், பதினொரு தசம் சைபர் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.07பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லாக் கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
மாத்தறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 38/1A, எஸ்பிளனேட் வீதி,
மாத்தறை.

1-787

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் சட்டத்தின் (4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 327377 - மாவத்தகே தொன் லாலிகா மாகரண்த

2008.07.10 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது: -

"கடன் எடுத்த மாவத்தகே தொன் லாலிகா மாகரண்த என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பில் ராகம பிரசித்த நொத்தாரிசு எம். டி. சி. டி. எஸ். எஸ். ராஜபக்ச அவர்களின் 2001.04.27 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 6901 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறிவு மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 2008.05.15 ஆந் திகதி வரை ரூபா 25,57,945 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் மேற்படி சொல்லப்பட்ட முறிவு இலக்கம் 6901 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்ட இக்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 25,57,945 பணத்தொகையுடன் 2008.05.16 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 15,00,000 இற்கு ஆண்டொன்றுக்கு 25% மற்றும் ரூபா 4,91,849 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 32% படி மேலதிக வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமைபெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளையில் நவம் மாஹார கிராமத்தில் அமைந்துள்ள கஜுகஹகும்புர என்ற காணியின் நிலஅளவையாளர் எச். எல். குருஸ் தாபரேவின் 10 மற்றும் 1993.06.14 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 6107/1993 காண்பிக்கப்பட்ட லொட் 1A இக் காணியின் எல்லைகள் - வடக்கு : இலங்கை கடற்படைக்குச் சொந்தமான காணி ; கிழக்கு : லொட் 1B ; தெற்கு : ரோட் ; மேற்கு : கனத்த மற்றும் குருந்துவத்த இலங்கை கடற்படை முகாமுக்குச் சொந்தமானது. இக்காணியின் விஸ்தீரணம் 1ஏ. 1றூ. 17.25பே. இக்காணி கம்பஹா காணிப் பதிவகத்தில் B 294/244 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி வரைபடம் இல. 6107/1993 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1A தற்சமயம் வரையப்பட்ட நிலஅளவையாளர், எஸ். ஜி. குணதிலகவின் 2001.04.17 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1705 இல் எல்லைகள் வடக்கு : குருந்துவத்த இலங்கை கடற்படை முகாமுக்கு சொந்தமானது; கிழக்கு : இக்காணியின் இடையில் அமைந்துள்ள வாய்க்காலுக்கான ஒதுக்கு மற்றும் வரைபடம் இலக்கம் 6107/1993 இன்படி லொட் 1B; தெற்கு : நவம் மஹார வீதி ; மேற்கு : மயானம் மற்றும் குருந்துவத்த இலங்கை கடற்படை முகாமுக்குச் சொந்தமானது. இக்காணியின் விஸ்தீரணம் 1ஏ. 1றூ. 17.25பே.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

1-793

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் சட்டத்தின் (4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 8113001035
கடன் கணக்கு இலக்கம் : 269730 - பிராமணகே சமின்த பிரசாத் பானாகொட ஆசாரிகே தோனா சுமலி செவ்வண்த்தி

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.09.29 ஆந் திகதியன்று பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது: -

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த பிராமணகே சமின்த பிரசாத் பானாகொட ஆச்சாரியாகே தோனா சுமலி செவ்வந்தி என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஜ. சமரசிங்கவின் 2005.11.25 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 1487 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு மேற்படி முறிவு மூலம் 2008.05.27 ஆந் திகதி ரூபா 11,59,684 வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின்

கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் சொல்லப்பட்ட முறிவு இலக்கம் 1487 இன் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களையும் மற்றும் எல்லாம் சேர்த்து இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதினதும் மேற்படி ரூபா 11,59,684 உடன் 2008.05.28 ஆந்திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 10,65,185 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 15% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99 இல் உரிமைபெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது".

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஹேவகம் கோரளையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் தெடிகம்முவ கிராமத்தில் அமைந்துள்ள வெலிபில்லகெல என்ற காணியின் நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்கவின் 1998.10.05 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 8904 இல் காண்பிக்கப்பட்ட லொட் 8 என்ற காணியின் எல்லைகள் வடக்கு : லொட் 12 மற்றும் 11 ; கிழக்கு : லொட் 11 ; தெற்கு : லொட் 13 மற்றும் 18 வரைபடம் இலக்கம் 8748 ; மேற்கு: லொட் 7 இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 12.40பே. மேற்படி வரைபடம் இலக்கம் 8904 இன் படி இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் G1163/227 இல் பதிவு செய்யப்பட்டது.

இக்கீழ் காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஹேவகம் கோரளையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் தெடிகம்முவ கிராமத்தில் அமைந்துள்ள வெலிபில்லகெல என்ற காணியின் நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்கவின் 1998.10.05 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 8904 படி லொட் 11 என்ற காணியின் எல்லைகள் வடக்கு : லொட் 5 ; கிழக்கு : லொட் 1 - 4 ; தெற்கு : சிரிசுமன மாவத்தை 1 ஆவது லேன் லொட் 8 ; மேற்கு: லொட் 10, 9, 13, 8 மற்றும் 12 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 11.70பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 8904 இன்படி இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் G1163/257 பதிவு செய்யப்பட்டது.

மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 8904 இல் காண்பிக்கப்பட்ட லொட் 12, (3.5 மீட்டர்) மற்றும் லொட் 13 (14 மீட்டர்) பாதை பாவிக்கும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

1-801

---

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2008, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடை, வனாத்த வீதி, 38 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அநுர விதானாராச்சி (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். எஸ். கலன்சூரிய அத்தாட்சிப்படுத்திய 2007, ஓகத்து 2 ஆந் திகதி கொண்ட 752 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட அநுர விதானாராச்சி மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்கவதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும்,

எழுபது இலட்சத்து ஒன்பதாயிரத்து நூற்று முப்பத்தாறு ரூபா எழுபத்தைந்து சதத்தையும் (ரூ. 70,09,136.75) 2008.08.26 ஆந் திகதியன்றுள்ளவாறு தவணைக் கடன்வசதி மீது நிலுவை யிலிருக்கும்அறுபத்து மூன்று இலட்சம் ரூபா மீது (ரூ. 63,00,000) 2008.08.27 முதல் விற்பனைத் திகதி வரை உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறும் 2008.08.26 ஆந் திகதியன்றுள்ளவாறு மேலதிகப் பற்றின் மீது நிலுவையிலுள்ள ஆயிரத்து நாநூறு ரூபா மீது (ரூ. 1,400) தொடர் அடிப்படையிலும் மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியர்ஸைச் சேர்ந்த திரிவங்க சீ. சேனநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று மஹரகம பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட வனாத்த வீதியில் அமைந்துள்ள 2 ஆவது ஒழுங்கை 05 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தையும் தற்பொழுது 38 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தையும் கொண்டுள்ளதும் மில்லகஹாவத்த அல்லது மஹாவத்த மற்றும் கெற்றகெலகஹாவத்த அல்லது மஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்ரமசிங்க தயாரித்த 1991, ஒற்றோபர் 2 ஆந் திகதிகொண்ட 5302 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு B என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : 2 ஆம் ஒழுங்கை ; கிழக்கில் : வனாத்த வீதி; தெற்கில் : வனாத்த வீதி 36 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம்; மேற்கில் : துண்டு A என்பன அமைந்துள்ளன. 5302 ஆம் இலக்க

வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினாலு தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.7பே.). இது கல்கிசை காணிப் பதிவகத்தில் M 1805/ 118 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

12-744/3

---

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2008, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"ஹங்வல, இஹல ஹங்வல 556/11 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சுசந்த சமரக்கோன் மஹவெடகே (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். எஸ். கலன்சூரிய அத்தாட்சிப்படுத்திய 2007, ஒற்றோபர் 22 ஆந் திகதி கொண்ட 804 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட சுசந்த சமரக்கோன் மஹாகொடகே மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும்,

பதின்மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபா அறுபத்தொரு சதத்தையும் (ரூ. 13,19,889.61) தவணைக் கடன்வசதியின் மீது 2008.09.03 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள முதல் பதினொரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா மீது (ரூ. 11,40,000) 2008.09.04 முதல் விற்பனைத் திகதி வரை உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரிவங்க அன்ட் சேனநாயக்க ஒக்ஷனியர்ஸைச் சேர்ந்த திரு. திரிவங்க சீ. சேனநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, மெதபற்று இஹல ஹங்வலயில் அமைந்துள்ளதும் தியபாரகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சேன இத்தமல்கொட தயாரித்த 2007.10.08 ஆந் திகதிகொண்ட 5591 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : டீ லியனவடு உரிமைகோரும் தியபோரகஹாலந்த வத்த ; கிழக்கில் : 5591 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 4 ; தெற்கில் : கம்சபா வீதி; மேற்கில் : 5591 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 என்பன அமைந்துள்ளன. மேற்படி 5591 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.பே.). இது அவிசாவளை காணிப் பதிவகத்தில் N 182/28 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

1-744/4

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0230001740

கடனாளியின் முழுப்பெயர் : மிஹிது குலசூரிய பட்டபெந்திகே மனோஜ் அன்டன் குமார பிரணாந்து

"நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். டி. பீ. பீ. ஆர். ஜயவர்தன என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 3372 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2006.03.09 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால்

உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் இரண்டு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று அறுபத்தொரு ரூபா எழுபது சதம் (ரூ. 2,20,361.70) 2007.07.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நாநூற்று நாற்பத்தொன்பது ரூபா பதினைந்து சதத்தினையும் (ரூ. 1,98,449.15) அதற்கான 2007.07.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து பன்னிரண்டு ரூபா ஐம்பத்தைந்து சதத்தினையும் (ரூ. 21,912.55) மொத்தமாக இரண்டு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று அறுபத்தொரு ரூபா எழுபது சதத்தினை (ரூ. 2,20,361.70) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நாநூற்று நாற்பத்தொன்பது ரூபா பதினைந்து சதத்திற்காக (ரூ. 1,98,449.15) அறவீடு செய்ய வேண்டிய 12.50 சதவீதமான வருடாந்த வட்டியினை 2007.08.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள் வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழிந்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது".

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளை துனகஹபத்துவவில் கதிரான கிராமத்தில் அமைந்துள்ள உலுஅம்பலம வத்த, தற்பொழுது குருகே சன் பிலவர் காடன் எனப்படும் காணிக்கு 2001.08.20 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ. டி. என். பீரிஸ் என்பவரால் அளந்து தயாரிக்கப்பட்ட 1911AA என்ற இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 8 இன் எல்லைகளாக வடக்கே : 7 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 24 ஆம் இலக்க காணித்துண்டும் (பாதைக்கான ஒதுக்கம்) ; தெற்கே : 9 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : இதே காணியின் மிகுதிப் பகுதியும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதின்மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 13.50பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் நீர்கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் E 972/186 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

1-803

---

### சம்பத் வங்கி பி. எல். சி.

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சம்பத் வங்கி பி. எல். சி. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

‘

கணக்கு இல. 0035-5000-5467 - ஜீ. எஸ். முண்முள்ள மற்றும் ஐ. சி. பிரியங்கா அல்லது சி. பி. இஹலவிதான

2008 சனவரி 31 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது : -

''கடப்பாடுடையவரான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வங்சாவெல, மெலேகொட "சந்தகெலும்" இல் கயான் சகிதா முண்முள்ள மற்றும் வங்சாவெல, மெலேகொட "சந்தகெலும்" இல் இஹலவிதானகே சமரி பிரியங்கா அல்லது சமரி பிரியங்கா இஹலவிதான வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு டபிள்யூ. எஸ். பறணமான அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, செத்தெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 703 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால், 2007, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்ட ரீதியாகப் பாவனையிலுள்ள ஒரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து அறுபத்துநான்கு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 1,84,964.38) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட தொகை ஒரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து அறுபத்துநான்கு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 1,84,964.38) ஐ 2007, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஒரு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நாநூற்று ஐம்பத்தேழு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,84,457.17) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு (16%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 703 கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில்

முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், தள்பே பத்துவில் கலாஹே கிராமத்தில் அமைந்த ''வெரலுகஹவத்த மற்றும் லாஓலுகஹவத்த'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டபிள்யூ. டி. யூ. கருணாரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003, நவெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1561A/ 2003 இல் குறிப்பிடப்பட்டு துண்டு A என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். மேலும் இந்தக் காணிக்குரிய சகல வழி வசதிகள், உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு A இன் எல்லைகளாவன - வடக்கில் : காலி இருந்து அக்குரஸ்ஸ வரையான பிரதான வீதி; கிழக்கில் : இந்தக் காணியிலிருந்து பிரிக்கப்பட்ட துண்டு 7 மற்றும் ஹிரிகல்கெட்டியவத்த அல்லது கஜுகஹவத்த; தெற்கில் : நிலஅளவை வரைபடம் இல. 290P இல் துண்டு 18 ; மற்றும் மேற்கில் : நிலஅளவை வரைபடம் இல. 290P இல் துண்டு 21 மற்றும் நிலஅளவை வரைபடம் இல. 3852A இல் துண்டு B என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1561A/2003 இற்கமைய இந்தக் காணி இருபத்தொன்பது தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 29.3பே.) விஸ்தீரணமுடையது. காலி காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D874/ 216 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-818/ 1

---

### சம்பத் வங்கி பி. எல். சி.

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 1006-5023-9177 - ஜீ. ஜீ. சிரியானந்த அல்லது ஜீ. ஜீ. எம். எஸ். எதிரிசிங்க மற்றும் ஆர். டி. கே. ஜயதிஸ்ஸ

2007, திசெம்பர் 27 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது : -

''கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இந்துல்கொடபிட்டிய, கட்டுபிட்டிய, கம்பிஅடிய இல் கொனயாலாகே கெதர சிரியானந்த அல்லது கொனயாலாகே கெதர மஞ்சுல சிரியானந்த எதிரிசிங்க மற்றும் ரண்பட்டிபுர தேவகே காந்தி ஜயதிஸ்ஸ மேலும் மேற்கூறப்பட்ட இந்துல்கொடபிட்டிய, கட்டுபிட்டிய, கம்பிஅடிய இல் கொனயாலாகே கெதர சிரியானந்த அல்லது கொனயாலாகே கெதர மஞ்சுல சிரியானந்த எதிரிசிங்க ஈடு செய்தவராக சம்பத் வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஜே. பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, யூலை 19 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 227 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2007, ஓகத்து 06 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு எட்டு இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூ. 8,26,000) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட தொகை எட்டு இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூ. 8,26,000) ஐ 2007, ஓகத்து 07 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஏழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 7,28,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு (16%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 227 கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கள்பட கோரளை இன் கள்பட பத்துவில் எலுகல்ல கிராமத்தில் அமைந்த ''களஒட்டுவாவேஹேன'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, சனவரி 25 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 3126 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன், மேலும் இந்தக் காணிக்கு சொந்தமான வழி வசதிகள், உரிமைகள் மற்றும் சகல சலுகைகளுடன், மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன : வடக்கில் : கூப்பி வத்த ; கிழக்கில் : அதே நிலஅளவை வரைபடத்தில் துண்டு 1 ; தெற்கில் : வீடுகளிலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் ரோட் மற்றும் ; மேற்கில் : களட்டுவெவஹேன என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 3126 இற்கமைய இந்தக்காணி ஒரு றூட் இருபத்துமூன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 23.2பே.) விஸ்தீரணமுடையது.

மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் கீழ் விபரிக்கப்பட்ட காணியின் மீள் நில அளவையாகும் :-

மேற்கூறப்பட்ட எலுகல்ல கிராமத்தில் அமைந்த ''களஒட்டுவாவேஹேன'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். ஆர். டி. கே. ஹேரத் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1989, திசெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 5357/560 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் சகலதுடன், மேற்கூறப்பட்ட

துண்டு 2 இன் எல்லைகளாவன - வடக்கில் : கூப்பி வத்த ; கிழக்கில் : அதே நிலஅளவை வரைபடத்தில் துண்டு 1 ; தெற்கில் : புகையிரத திணைக்கள ஒதுக்கு மற்றும் ; மேற்கில் : துண்டுகள் 3, 7 மற்றும் 6 என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 5357/560 இற்கமைய இந்தக்காணி ஒரு றூட் இருபத்துமூன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 23.2பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கேகாலை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் D 584/265 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-818/3

---

### சம்பத் வங்கி பீஎல்சி

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி PLC பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

A. V. லால் - கணக்கு இல. 1014 5005 8115

2007 ஒற்றோபர் 26ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது:-

"கடப்பாடுடையவரான இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசில் தெனியாய, டெம்பல் ரோட் இல் அதல விதானகே லால் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற நொத்தாரிசு W. S. பறணமான அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006 யூன் 26ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 571 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால் 2007 ஓகத்து 16ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்டரீதியாகப் பாவனையிலுள்ள பதினைந்து இலட்சத்து நாற்பதாயிரத்து தொளாயிரத்து முப்பத்தைந்து ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 15,40,935.59) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட தொகை பதினைந்து இலட்சத்து நாற்பதாயிரத்து தொளாயிரத்து முப்பத்தைந்து ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 15,40,935.59) ஐ 2007 ஓகத்து 17ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை பதின்நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு ரூபா அறுபத்திமூன்று சதம் (14,50,256.63) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 275 கொண்ட சொல்லப்பட்ட முறிகள் மூலம் வரைறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற எலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது."

#### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக் கோரளை இன் மத்துகொபே கிராமத்தில் அமைந்த "பறணகும்புருகொடெல்ல மற்றும் பறணகும்புருகொடெல்லஹேன" என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, பெப்புருவரி 24 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 397 இல் குறிப்பிடப்பட்டு துண்டு B1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதுடன். மேலும் இந்தக் காணிக்குரிய சகல வழி வசதிகள், உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு B1 இன் எல்லைகளாவன - வடக்கில் : பள்ளேகம இருந்து தெனியாய வரையான கிராம சபை ரோட் ; கிழக்கில் : துண்டு 23 (தெருவுக்கான ஒதுக்கு) ; தெற்கில்: அதே காணியின் துண்டு B2 ; மற்றும் மேற்கில் : அதே காணியின் துண்டு B2 மற்றும் நிலஅளவை வரைபடம் இல. 1611 இல் துண்டு A என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 397 இற்கமைய இந்தக் காணி இருபத்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 24பே.) விஸ்தீரணமுடையது. கொட்டபொல காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 77/253 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-818/2

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0021-5002-1351 - டி. கே. டபிள்யூ. சுமித்ராரச்சி மற்றும் ஜீ. சி. ஈ. பெரேரா

2006, யூன் 29 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது : -

"கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, அநுராதபுரம் மைத்ரிபால சேனநாயக்க மாவத்தை, இல. 12 இல் வசிக்கும் டொன் குலபதி வஸந்த சுமித்ராரச்சி மற்றும் குருதாரகே சம்பா எரஞ்சனி பெரேரா மேலும் மேற்கூறப்பட்ட அநுராதபுரம் மைத்ரிபால சேனாநாயக்க மாவத்தை, இல. 12 இல்

வசிக்கும் குருதாரகே சம்பா எரஞ்சனி பெரேரா ஈடுசெய்தவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திஸாநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2001, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2241 மற்றும் 2004, ஏப்பிறல் 22 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 3230 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளராதலால், 2006, ஏப்பிறல் 30 ஆந் திகதி யன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகள் மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு செலுத்த வேண்டிய முழுத் தொகையான இலங்கையில் சட்ட ரீதியாக பாவனையிலுள்ள ஐந்து இலட்சத்து அறுபத்தையாயிரத்து நாநூற்று இருபத்தேழு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 5,65,427.86) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட ஐந்து இலட்சத்து அறுபத்தையாயிரத்து நாநூற்று இருபத்தேழு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 5,65,427.86) ஐ 2006, மே 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை நான்கு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நூற்று தொண்ணூற்று ஆறு ரூபா (ரூ. 4,91,196) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினெட்டு (18%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 2241 மற்றும் 3230 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறிகள் மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் பி. கே. ஈ. சேனாபதி அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம்பலாத்த மத்திய பிரதேச செயலாளர் பிரிவினுள் நுவரகம் கோரளை சாலிய மாவத்தை, கிராம சேவை அதிகாரி பிரிவு 318 இல் நுவரவெவ கிராமத்தில் அமைந்த வடக்கில் : துண்டு 607 ; கிழக்கில் : துண்டு 614 ; தெற்கில் : துண்டுகள் 614 (i) மற்றும் 604 A மற்றும் ; மேற்கில் : துண்டு 605 என்பவற்றை எல்லைகளாகக் கொண்ட ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 90பே.) விஸ்தீரணமுடைய காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வி. சோமபால அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, யூலை 21 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 3547 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கில் : துண்டு 607 இன் ஒரு பாகம் ; கிழக்கில் : துண்டு 614 ; தெற்கில் : மேற்கூறப்பட்ட காணியின் மிகுதிப் பாகம் மற்றும் ; மேற்கில் : துண்டு 605 என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 3547 இற்கமைய இந்தக் காணி ஒரு றூட் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. அநுராதபுரம் காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் L. D. O. 36/212 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-818/5

### சம்பத் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0022-5000-6384 - ரீ. எச். ஜீ. சந்திரதாச மற்றும் ரீ. எச். ஜீ. எஸ். சீ. கமகே

2005, பெப்புருவரி 22 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் விசேட மாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது : -

''கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, தெஹிஓவிட்ட, ஈரியகொல்ல, இல. 75 ஐச் சேர்ந்த துடாவ ஹேவ கமகே சமன் சந்திரகுமார கமகே மற்றும் துடாவ ஹேவ கமகே சந்திரதாச ஆகிய இருவரும் மற்றும் ஈடுவைத்தவரான மேற்கூறப்பட்ட தெஹிஓவிட்ட, ஈரியகொல்ல, இல. 75 ஐச் சேர்ந்த சொல்லப்பட்ட துடாவ ஹேவ கமகே சந்திரதாச ஆகியோர், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். பீ. டபிள்யு. ஜயவீர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, ஏப்பிறல் 30 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2192 இன்மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளா ராதலால், 2003, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு சொல்லப்பட்ட முறிமூலம் வரவேண்டிய மொத்தத் தொகையாக இருக்கின்ற சட்டப்படி இலங்கை நாணயத்தில் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பது சதம் மட்டும் (ரூ. 5,50,549.40) கொண்ட தொகை தற்போது வரவேண்டிய உரியதாகவுள்ள தாதலாலும்; 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்படட அதிகாரங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பது சதம் மட்டும் (ரூ. 5,50,549.40) ஐ, மேலும் 2004, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஐந்து இலட்சம் ரூபா மட்டும் (ரூ. 5,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு இருபது சதவீத வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 2192 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அளுத்கம கோறளை மேற்கு, தெஹிஓவிட்ட பிரதேச சபை எல்லைகளுக்குள், தெஹிஓவிட்ட ஊருபெலவ்வவில் அமைந்துள்ளதும் ''தியஹொந்த எலகாவ கும்புற'' (பாகம்) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எம். கமகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000,

செத்தெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1398 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு : ராஜசேக்கரவிற்கு சொந்தமான மதயிரவல வனாத்தர ; கிழக்கு : தியஹொந்த எல ; தெற்கு : இதே காணியின் எஞ்சிய பாகம் ; மேற்கு : பெரு வீதி. சொல்லப்பட்ட வரைபடம் இல. 1398 இற்கமைய முப்பத்தெட்டு தசம் மூன்று சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 38.30பே.) விஸ்தீரணமுடையது. அவிசாவளை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் கியூ 117/14.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-818/4

---

## பேன் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியினது பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வத்தளை கிளை - வாடிக்கையாளரின் பெயர் : (1) ஏ. சீ. என். ஒடோ ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், (2) லந்தெகெதர ஆனந்த குமாரசிரி எனும் ஆனந்த குமாரசிரி லந்தெகெதர மற்றும் சாமலி தில்ஹானி குனசேகர

2008.09.24 ஆந்திகதி நடைபெற்ற பேன் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் பீ. எல். சீ பணிப்பாளர்களது கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"PQ48 எனும் பதிவிலக்கத்தை கொண்ட பேன் ஏசியா பாங்கிங் கோர்ப்பசேன் பிஎல்சீ முன்னாள் பான்ஏசியா பாங்கிங் கோர்ப்பரேசன் லிமிட்டெட் எனக் குறிக்கப்பட்டவர்களுக்கு கொழும்பு நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே முன்னிலையில் 2005.10.05 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1781 மற்றும் 2007.07.04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2385 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை ஏ. சீ. என். ஒடோ ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடன் பெற்றவராகவும் லந்தெகெதர ஆனந்த குமாரசிரி எனும் ஆனந்த குமாரசிரி லந்தெகெதர அத்தியட்சராகவும் மற்றும் ஈட்டாளராகவும் மீளச் செலுத்தத் தவறியுள்ளார்கள்.

மேலும் PQ48 எனும் பதிவிலக்கத்தை கொண்ட பேன் ஏசியா பாங்கிங் கோர்ப்பசேன் பீஎல்சி முன்னாள் பேன் ஏசியா பாங்கிங் கோர்ப்பரேசன் லிமிட்டெட் எனக் குறிக்கப்பட்டவர்களுக்கு கொழும்பு நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே முன்னிலையில் 2007.10.09 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2480 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது லந்தெகெதர ஆனந்த குமாரசிரி எனும் ஆனந்த குமாரசிரி லந்தெகெதர மற்றும் சாமலி தில்ஹானி குணசேகர கடன் பெற்றவர்களாகவும் லந்தெகெதர ஆனந்த குமாரசிரி எனும் ஆனந்த குமாரசிரி லந்தெகெதர ஈட்டாளராகவும் மீளச் செலுத்தத் தவறியுள்ளார்கள்.

ஆதலால் குறித்த முறிகளின் நிமித்தம்

(அ) முதலாவது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட சலுகை மீது ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து நாநூற்று இருபது ரூபா எண்பத்து மூன்று சதம் (ரூ. 1,12,420.83) தொகையை 2008.03.31 ஆந் திகதி வரை வட்டியுடனும், இதனுடன் மேற்கூறிய முறிகளின் மீதான முதலை கொடுப்பனவு செய்யும் திகதி வரை ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து நாநூற்று இருபது ரூபா எண்பத்து மூன்று சதம் (ரூ. 1,12,420.83) ஆகிய முதல் தொகையின் மீது 2008.04.01 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றிற்கு 38 வீத வட்டியையும்,

(ஆ) இரண்டாவது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட சலுகை மீது ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றி ஆறாயிராத்து மூன்று ரூபா தொண்ணூற்றி இரண்டு சதம் (ரூ. 9,96,003.92) தொகையை 2008.03.31 ஆந் திகதி வரை வட்டியுடனும், இதனுடன் மேற்கூறிய முறிகளின் மீதான முதலை கொடுப்பனவு செய்யும் திகதி வரை ஒன்பது இலட்சம் ரூபா (ரூ. 9,00,000) ஆகிய முதல் தொகையின் மீது 2008.04.01 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றிற்கு 29% வீத வட்டியையும்,

பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷன் பீ. எல். சீ க்கு வருமதியாகச் சேர வேண்டியுள்ளது.

ஆதலால் குறித்த 1781, 2385 மற்றும் 2480 ஆம் இலக்க முறிகளால் குறித்த தொகையான பதினொரு இலட்சத்து எட்டாயிரத்து நாநூற்று இருபத்து நான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 11,08,424.75) ஆகிய தொகையையும், மேற்கூறிய திகதிகள் தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்கூறிய வட்டியையும், செலவுகளையும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணத்தொகைகளையும் அறவிடுவதற்கு குறித்த வங்கி, கோட்டே, பிட்டகோட்டே, மஹாநாம டிரைவ், 474 ஆம் இலக்க ஆர். எஸ். எம். ஒக்ஸன்சைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் இரஞ்ஜித் எஸ். மஹாநாம என்பவரினால் குறித்த வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதன் கீழ் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்தையும் வளவையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யுமாறு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதும் தத்துவங்களினதும் கீழ் இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறது."

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கம்பளை பதிவு பிரிவு, உடபலாத கங்க பஹல கோரளே நகர சபை எல்லைகளுக்குள், ரத்மல்கடுவையில் அமைந்திருக்கும் (முன்பு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டீ. ஜீ. ரொட்ரிகோ அவர்களால் 1960.06.02 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 3359 நில அளவைப்படத்தில் குறிக்கப்பட்ட) ஆராமய மாவத (முன்பு மேல் சிங்ஹபிடிய வீதி) வரிமதிப்பு இலக்கம் 6/16 சிங்ஹாபிடிய எஸ்டேட் எனும் ஆதனத்தின் பகுதியான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. ஜயகொடி அவர்களால் 1994.10.21 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 3348 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் 7 மற்றும் 9 என அட்சரமிடப்பட்ட பிரிவிடல் செய்யப்பட்ட ஒன்றிணைந்த துண்டுகள் குறித்த நில அளவைப்படத்தின் பிரகாரம் 7 ஆம் இலக்க துண்டின் விஸ்தீரணம் பதினைந்து தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.14பே.) அல்லது 0.380 ஹெக்டயார் மற்றும் 9 ஆம் இலக்க துண்டின் விஸ்தீரணம் ஐந்து தசம் ஒன்பது எட்டு

பேர்ச்சஸ் ()ஏ. 0றூ. 5.98பே.) அல்லது 0.01512 அல்லது இரண்டு துண்டுகளும் சேர்ந்த மொத்த விஸ்தீரணம் இருபத்தி ஒன்று தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21.12பே.) 7 மற்றும் 9 என குறிக்கப்பட்ட துண்டுகளினது எல்லை - வடக்கு : சமரவீரவின் 4/16 வளவை பிரிக்கும் மேற்கூறிய அளவைப்படத்தில் 8 என அட்சரமிடப்பட்ட வீதி; வடகிழக்கு : மேற்கூறிய அளவைப்படத்தில் குறித்திருக்கும் 15/45 வரிமதிப்பிட்ட வளவின் மிகுதி ; தெற்கு : 6/45 வரிமதிப்பிட்ட பொல்வத்த விஹாரைக்கு சொந்தமான காணி ; மேற்கு : மேற்கூறிய அளவைப்படத்தில் 6 என அட்சரமிடப்பட்ட இலக்க துண்டு ஆகிய எல்லைக்குள் அமைந்திருக்கும் ஆதனமும் இதடங்கலும். வரிமதிப்பு இலக்கம் ஆராமய வீதி 10/10 தற்பொழுது 6/16.

நிலஅளவையாளர் டீ. ஏ. ஜயகொடி அவர்களால் 1994.10.21 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 3348 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் 8 என அட்சரமிடப்பட்ட துண்டு ஊடாக போக்குவரத்து உரித்தும்.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

இரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறிவிடுதல்கள்.

1-822

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.